**வணிகர்களுக்கான ‘சமாதான்’ திட்டம் அறிமுகம்: ரூ.50,000 வரை வரி, வட்டி, அபராதம் தள்ளுபடி - முதல்வர் ஸ்டாலின் அறிவித்தார்**



வணிக வரி ‘சமாதான்’ திட்டம் குறித்து சட்டப்பேரவையில் 110 விதியின்கீழ் அறிவிப்பை வெளியிட்டு பேசிய முதல்வர் ஸ்டாலின்.

**சென்னை:** வணிகர்கள், நிறுவனங்கள் வணிகவரி நிலுவை தொகையை செலுத்த புதிய அணுகுமுறை, கூடுதல் சலுகைகளுடன் கூடிய ‘சமாதான்’ திட்டத்தை சட்டப்பேரவையில் 110 விதியின்கீழ் முதல்வர் ஸ்டாலின் அறிவித்துள்ளார். இதன்படி, ரூ.50 ஆயிரத்துக்கு குறைவான வரி, வட்டி, அபராதம் நிலுவையில் இருந்தால், அத்தொகை முற்றிலுமாக தள்ளுபடி செய்யப்படும். மற்ற வணிகர்கள் குறிப்பிட்ட சதவீத தொகையை செலுத்தி வழக்கில் இருந்து விடுவித்துக்கொள்ள வகை செய்யப்பட்டுள்ளது.

சட்டப்பேரவையில் 110 விதியின் கீழ் முதல்வர் ஸ்டாலின் நேற்று வெளியிட்ட அறிவிப்பில் கூறியிருப்பதாவது:

தமிழக அரசுக்கு வணிகர்கள் செலுத்த வேண்டிய வரி நிலுவைதொடர்பாக 2.11 லட்சம் வழக்குகள் நிலுவையில் உள்ளன. இதில்சம்பந்தப்பட்ட வணிகர்கள், நிறுவனங்களின் எண்ணிக்கை 1.42 லட்சம். நிலுவையாக உள்ள தொகை ரூ.25 ஆயிரம் கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. இதனால், வணிகவரி துறையின் பணிச்சுமை அதிகரிப்பதுடன், வணிகர்களும் மிகுந்த சிரமத்துக்கு

ஆளாகின்றனர். அரசுக்கு வரவேண்டிய வருவாயும் பெருமளவில் நிலுவையாக உள்ளது.

இதில் பெரும்பான்மை வழக்குகள் தமிழ்நாடு வணிகவரி சட்டம், மதிப்புக்கூட்டு வரி சட்டம் ஆகியவற்றின்கீழ் நிலுவையில் உள்ளவை. இந்த சட்டங்கள் மற்றும் பல இதர சட்டங்களையும் உள்ளடக்கி, கடந்த 2017 ஜூலை 1-ம் தேதி முதல் நாடு முழுவதும் ஜிஎஸ்டி சட்டம் அறிமுகம் செய்யப்பட்டு, நடைமுறையில் உள்ளது.

இருப்பினும், ஏற்கெனவே வழக்கில் இருந்த வரிச்சட்டங்களின்கீழ் அரசுக்கு செலுத்த வேண்டிய வரி, அதன் மீதான வட்டி மற்றும் அபராதம் ஆகியவை இன்னமும் பல வணிகர்களின் பெயரில் நிலுவையில் இருந்து வருகின்றன. நிலுவையை திருப்பி செலுத்துவதில் சலுகைகள் வழங்கப்பட்டு, இந்த பிரச்சினைக்கு முடிவு காண வணிகர்கள் நீண்ட நாளாக முன்வருகின்றனர். இதைகவனமாக பரிசீலித்து, நிலுவை தொகையை வசூலிப்பதில் ஒரு சமாதான திட்டத்தை செயல்படுத்த அரசு முடிவெடுத்துள்ளது.

இதுபோல கடந்த காலங்களில் பல சமாதான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டாலும், புதிய அணுகுமுறை, கூடுதல் சலுகைகளுடன் இத்திட்டம் தற்போது வடிவமைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில், வரி மதிப்பீட்டு ஆண்டில் ரூ.50 ஆயிரத்துக்கு குறைவான வரி, வட்டி, அபராதம் செலுத்த வேண்டிய வணிகர்களுக்கு நிலுவை தொகை முற்றிலும் தள்ளுபடி செய்யப்படும். ஒவ்வொரு வரி மதிப்பீட்டு ஆண்டிலும், ரூ.50 ஆயிரத்துக்கு உட்பட்ட நிலுவை இனங்களுக்கு வரி செலுத்துவதில் இருந்து முழு விலக்கு அளிக்கப்படும்.

**தமிழக வரலாற்றில் முதல் முறை:** தமிழக வரலாற்றில் சிறு வணிகர்களுக்கு முழுமையாக வரி நிலுவை தள்ளுபடி செய்யப்படுவது இதுவே முதல்முறை.

அரசின் இந்த முடிவால் 1.40 லட்சம் வழக்குகளில் சம்பந்தப்பட்ட 95,502 வணிகர்கள் நிலுவை தொகை தள்ளுபடியால் பயனடைவார்கள். இவர்களை தவிர, இதர வணிகர்கள், நிறுவனங்கள் ரூ.50 ஆயிரம் முதல் ரூ.10 லட்சம் வரை, ரூ.10 லட்சம் முதல் ரூ.1 கோடி வரை, ரூ.1 கோடி முதல் ரூ.10 கோடி வரை, ரூ.10 கோடிக்கு மேல் நிலுவை என 4 வரம்புகளின்கீழ் கொண்டு வரப்படுவார்கள்.

இந்த 4 வரம்புகளில், முதலில் உள்ளவர்கள் மொத்த நிலுவையில் 20 சதவீதம் அல்லது நிலுவையில் உள்ள வணிகவரி, வட்டி, அபராதத்தில் ஒரு குறிப்பிட்ட சதவீத தொகையை செலுத்தி, வழக்கில் இருந்து வெளிவரலாம். இதர 3 வரம்புகளில் உள்ள வணிகர்கள் நிலுவையில் உள்ள வணிக வரி, வட்டி, அபராதத்தில் குறிப்பிட்ட சதவீதத்தை கட்டினால் வழக்கில் இருந்து வெளிவரும் வகையில் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

மேலும் ஒரு முக்கிய சலுகையாக, நிலுவை தொகையை வணிகர்கள் கட்ட முன்வரும் நாள் வரைஅவர்கள் கணக்கில் ஏற்றப்படக்கூடிய திரண்ட வட்டித் தொகையும் (Accrued Interest) முழுவதுமாக தள்ளுபடி செய்யப்படும்.

**4 மாதங்களுக்கு..** இந்த சமாதான திட்டம் அக்.16-ம் தேதி முதல் நடைமுறைக்கு வரும். 4 மாதங்களுக்கு, அதாவது 2024 பிப்.15-ம் தேதி வரை நடைமுறையில் இருக்கும். அரசின் முயற்சியை வணிகர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் அறிவித்தார்.

முதல்வரின் இந்த அறிவிப்பை செல்வப்பெருந்தகை (காங்கிரஸ்), ஜி.கே.மணி (பாமக) எஸ்.எஸ்.பாலாஜி (விசிக), டி.ராமச்சந்திரன் (இந்திய கம்யூனிஸ்ட்), சதன் திருமலைக்குமார் (மதிமுக), ஈ.ஆர்.ஈஸ்வரன் (கொமதேக), ஜவாஹிருல்லா (மமக) ஆகியோர் வரவேற்று பேசினர். இத்திட்டம்முறையாக சிறு வணிகர்களுக்குதான் போகிறதா என்பதை கண்காணிக்க வேண்டும் என்று நாகை மாலி (மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்) கூறினார்.

‘சமாதான்’ திட்டம் தொடர்பான சட்டத் திருத்த மசோதாவை அமைச்சர் மூர்த்தி நேற்று அறிமுகம் செய்தார். நேற்றே இந்த மசோதா நிறைவேற்றப்பட்டது.

## ஒலிம்பிக்கில் சிறப்பாக செயல்பட வேண்டும் - விளையாட்டு வீரர்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி அறிவுரை




விளையாட்டு வீரர்களுடன் பிரதமர் மோடி

**புதுடெல்லி:** சீனாவின் ஹாங்சோ நகரில் கடந்த வாரம் முடிவடைந்த 19-வது ஆசிய விளையாட்டு போட்டியில் இந்தியா முதன் முறையாக 28 தங்கம் உட்பட 107 பதக்கங்கள் வென்று சாதனை படைத்தது.

இந்நிலையில், பதக்கம் வென்ற வீரர், வீராங்கனைகளுடன் பிரதமர் மோடி நேற்று கலந்துரையாடினார். டெல்லியில் உள்ள மேஜர் தயான் சந்த் தேசிய மைதானத்தில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோடி பேசியதாவது: விளையாட்டு வீரர்கள் சிறந்ததைப் பெறுவதை உறுதி செய்வதற்காக அரசு அனைத்து தடைகளையும் அகற்றும். ஆசிய விளையாட்டில் நீங்கள் 100 பதக்கங்களைத் தாண்டி விட்டீர்கள். அடுத்த முறை, இந்த சாதனையை நாம் முறியடிக்க வேண்டும். பாரீஸ் ஒலிம்பிக் போட்டிக்காக உங்கள் சிறந்த முயற்சியை மேற்கொள்ளுங்கள்.

இந்தியாவில் திறமைக்கு என்றுமே பஞ்சம் இருந்ததில்லை. வெற்றி பெற வேண்டும் என்ற எண்ணம் எப்போதும் இருந்திருக்கிறது. முன்பும் அவர்கள் சிறப்பாக செயல்பட்டனர், ஆனால் அவர்களுக்கு நிறைய தடைகள் இருந்தன. ஆனால், 2014-ம் ஆண்டுக்குப் பிறகு இந்திய வீரர்களுக்கு வெளிநாடுகளில் சிறந்த பயிற்சி, வசதிகள், போட்டி கள் கிடைத்து வருகின்றன. எந்த போட்டியில் பங்கேற்றாலும் பதக்கங்களை வெல்கிறோம். இது விளையாட்டுத் துறையில் இந்தியாவுக்கு ஒரு நல்ல அறிகுறியாகும்.

நீங்கள் புதிய தலைமுறையினரை ஊக்குவிக்கும் புதிய வழிகளைத் திறந்துள்ளீர்கள். இந்த செயல்திறன் பாரீஸ் ஒலிம்பிக்குக்கு புதிய உத்வேகத்தை அளிக்கும்.

நமது வீராங்கனைகள் அற்புதமான செயல்திறனை வெளிப்படுத்தியுள்ளனர். அவர்கள், நாட்டில் உள்ள பெண்களின் வலிமையை வெளிப்படுத்தினர். ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் நாம் வென்ற பதக்கங்களில் பாதி பெண்கள்

வென்றதாகும். டிராக் அண்ட் ஃபீல்டில் அவர்கள், செயல்பட்ட விதம் தங்கப் பதக்கத்தைத் தவிர வேறு எதற்கும் அவர்கள் தயாராக இல்லை என்பதை எனக்கு உணர்த்தியது. இந்த ஆசிய விளையாட்டுப் போட்டிகளில், 125 விளையாட்டு வீரர்கள் கேலோ இந்தியா திட்டத்தின் தயாரிப்புகளாக இருந்தனர், அவர்கள் 40 பதக்கங்களை வென்றுள்ளனர். இது கேலோ இந்தியா சரியான திசையில் முன்னேறி வருவதைக் காட்டுகிறது.

கேலோ இந்தியாவின் கீழ் 3,000-க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்கள் பயிற்சி, மருத்துவம் மற்றும் உணவு, உதவிகளைப் பெறுகிறார்கள். ஒட்டுமொத்தமாக விளை யாட்டு வீரர்களுக்கு ரூ.25,000 கோடி நிதியுதவி வழங்கப்படுகிறது. அடுத்த 5 ஆண்டுகளில், விளையாட்டு வீரர்களுக்காக அரசு கூடுதலாக ரூ.3000 கோடி செலவிடும், மேலும் உள்கட்டமைப்பு உருவாக்கப்படும். தற்போதைய இந்திய விளையாட்டு வீரர்கள் சிறந்த திறனை மட்டும் வெளிப்படுத்த விரும்புவதில்லை. அவர்கள் பதக்கங்களை விரும்புகிறார்கள். எல்லா காலத்திலும் சிறந்தவர்கள் நீங்கள்தான்.

நாடு போதைப்பொருளுக்கு எதிராக ஒரு தீர்க்கமான போரை நடத்தி வருகிறது. அது ஊக்கமருந்துக்கு எதிரான போர். நீங்கள் பள்ளிகளுக்குச் சென்று பதக்கங்களை வெல்வதற்கான சரியான வழி என்ன என்பதை மாணவர்களுக்கு சொல்லவேண்டும், அவர்கள் உங்கள் பேச்சைக் கேட்பார்கள். அதில் நீங்கள் பெரும் பங்கு வகிக்க முடியும். போதைப்பொருட்கள் விளைவிக்கும் தீங்குகளை இளைஞர்களுக்குச் சொல்வதை உங்கள் பணியாக ஆக்கிக்கொள்ளுங்கள். இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி பேசினார்.

## இக்கட்டான இந்த தருணத்தில் இஸ்ரேலுக்கு இந்தியா துணை நிற்கும்: நெதன்யாகுவிடம் மோடி உறுதி



கோப்புப்படம்

**புதுடெல்லி:** பாலஸ்தீன எல்லையில் தொடரும் போர் பிரச்சினை குறித்து இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, பிரதமர் நரேந்திர மோடியை தொலைபேசியில் நேற்று தொடர்பு கொண்டு பேசினார். ‘‘இந்த கடினமான நேரத்தில் இந்திய மக்கள், இஸ்ரேலுடன் உறுதியாக நிற்கின்றனர். தீவிரவாதத்தை அதன் அனைத்து வடிவங்களிலும் வெளிப்பாடுகளிலும் இந்தியா கடுமையாகவும் சந்தேகத்துக்கு இடமின்றியும் கண்டிக்கிறது’’ என்று அப்போது, நெதன்யாகுவிடம் மோடி தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் நாட்டின் மீது பாலஸ்தீனத்தை சேர்ந்த ஹமாஸ் தீவிரவாதிகள் கடந்த 7-ம் தேதி திடீர் தாக்குதல் நடத்தினர். சுமார்5 ஆயிரம் ராக்கெட் ஏவுகணைகளை வீசி தாக்குதலை இஸ்ரேல் மீது ஹமாஸ் படையினர் தொடங்கினர். இதனால், இரு நாடுகளுக்கும் இடையே போர் மூண்டுள்ளது. பதிலுக்கு இஸ்ரேலும் தனது தீவிர

தாக்குதலை தொடங்கியுள்ளது. இரு தரப்பிலும் 1,200-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். ஏராளமானோர் படுகாயம் அடைந்தனர்.

இந்நிலையில், ஹமாஸ் படை வசம் இருந்த காசா எல்லை பகுதி, தெற்கு பகுதிகளை முழுமையாக தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது. இதற்கிடையே, தொடர்ந்து 4-வது நாளாக இரு தரப்புக்கும் இடையே போர் நீடித்து வருகிறது.

இந்த நிலையில், பிரதமர் நரேந்திர மோடியை, இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியுள்ளார். அப்போது, இஸ்ரேலில் உள்ள நிலைமை குறித்து பிரதமர் மோடியிடம், நெதன்யாகு விளக்கினார்.

இதுகுறித்து பிரதமர் நரேந்திர மோடி தனது எக்ஸ் சமூக வலைதளப் பக்கத்தில் தெரிவித்துள்ளதாவது:

பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் தொலைபேசி அழைப்புக்கும், இஸ்ரேலில் தற்போதைய நிலைமை குறித்து தெரிவித்ததற்கும் நன்றி.

இந்த கடினமான நேரத்தில் இந்திய மக்கள், இஸ்ரேலுடன் உறுதியாக நிற்கின்றனர் என்றும், தீவிரவாதத்தை அதன் அனைத்து வடிவங்களிலும் வெளிப்பாடுகளிலும் இந்தியா கடுமையாகவும் சந்தேகத்துக்கு இடமின்றியும் கண்டிப்பதாகவும் நெதன்யாகுவிடம் உறுதிபட தெரிவித்துள்ளேன்.

இவ்வாறு பிரதமர் மோடி அதில் பதிவிட்டுள்ளார்.

## தொழிலாளர் சந்தையில் பெண்களின் பங்கு குறித்த ஆராய்ச்சி: அமெரிக்க பேராசிரியைக்கு பொருளாதார நோபல் பரிசு



பேராசிரியை கிளாடியா கோல்டின்

**புதுடெல்லி:** இந்த ஆண்டுக்கான பொருளாதார அறிவியலுக்கான நோபல் பரிசுக்கு பேராசிரியை கிளாடியா கோல்டின் தேர்வு செய்யப்பட்டுள்ளார். தொழிலாளர் சந்தையில் பெண்களின் பங்கு குறித்த விரிவான ஆராய்ச்சிக்காக அவருக்கு இந்த பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

மருத்துவம், இயற்பியல், வேதியியல், அமைதி, இலக்கியம், பொருளாதாரம் ஆகிய 6 துறைகளில் மக்கள் பயனடையும் வகையில் சிறப்பாக செயல்படுபவர்களுக்கு ஆண்டுதோறும் நோபல் பரிசு அறிவிக்கப்படுகிறது.

கடந்த வாரம் 5 துறைகளுக்கான பரிசு அறிவிக்கப்பட்ட நிலையில், பொருளாதார அறிவியலுக்கான நோபல் பரிசுக்கு அமெரிக்காவின் ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் பேராசிரியையாக பணியாற்றி வரும் கிளாடியா கோல்டின் தேர்வு செய்யப்பட்டுள்ளதாக ராயல் ஸ்வீடிஸ் அகாடமி ஆப் சயின்சின் பொதுச் செயலர் ஹான்ஸ் எலெக்ரென் நேற்று அறிவித்தார். பெண் தொழிலாளர்

சந்தையின் விளைவுகளைப் பற்றிய மேம்பட்ட புரிதலுக்காக அவர் இந்த பரிசுக்கு தேர்வு செய்யப்பட்டதாக நோபல் தேர்வு குழு தெரிவித்துள்ளது.

உலகளாவிய தொழிலாளர் சந்தையில் பெண்கள் மிகவும் குறைவாகவே உள்ளனர். மேலும், அவர்களின் உழைப்பிற்கான ஊதியம் என்பது ஆண்களைக் காட்டிலும் குறைவாகவே உள்ளது. இதுதொடர்பாக கோல்டின், 200 ஆண்டுகளுக்கும் மேலான தரவுகளை சேகரித்து, வருமானம் மற்றும்வேலைவாய்ப்புகளில் பாலின வேறுபாடுகளின் முக்கிய ஆதாரங்களைவெளிப்படுத்தியுள்ளார்.

200 ஆண்டுகளுக்கும் மேலாக தொழிலாளர்களின் சந்தையில் பெண்களின் பங்கு மேல் நோக்கி செல்லவில்லை என்பதையும், அதற்கு பதிலாக யு-வடிவ வளைவை உருவாக்கியுள்ளதாகவும் அவர் தனது ஆய்வில் நிறுவியுள்ளார்.

திருமணமான பெண்களின் பங்கேற்பு 19-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் விவசாய சமூகத்திலிருந்து தொழில் துறை சமூகமாக மாறியதுடன் குறைந்தது. ஆனால், 20-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சேவை துறை வளர்ச்சியுடன் பெண்களின் பங்களிப்பு அதிகரிக்கத்தொடங்கியதாக கிளாடியா கோல்டின் தனது ஆய்வில் தெரிவித்துள்ளார்.

வீடு மற்றும் குடும்பத்துக்கான பெண்களின் பொறுப்புகள் தொடர்பான சமூக விதிமுறை மற்றும் கட்டமைப்புகளின் விளைவுகளை வைத்து கோல்டின் இந்த முறையை விளக்கியுள்ளார்.

பொருளாதார துறைக்கான விருது 1968-ல் ஸ்வீடனின் மத்திய வங்கியால் உருவாக்கப்பட்டது. இது, ஆல்பிரட் நோபலின் நினைவாக பொருளாதார அறிவியலுக்கான பேங்க் ஆப் ஸ்வீடன் பரிசு என்றும் அழைக்கப்படுகிறது.

6 துறைகளில் தேர்வானவர்களுக்கு ஆஸ்லோ மற்றும் ஸ்டாக்ஹோமில் டிசம்பர் மாதம் நடைபெறும் விழாவில் நோபல் பரிசுகள் வழங்கப்படவுள்ளன. ரொக்க பரிசாக ரூ.8.3 கோடியும், 18 காரட் தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழும் வழங்கப்படும்.

இதுவரை பொருளாதார நோபல் பரிசுக்கு தேர்வு செய்யப்பட்ட 92 பேரில் இருவர் மட்டுமே பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது

**நடப்பு நிதியாண்டில் இந்தியாவின் ஜிடிபி வளர்ச்சி 6.3% ஆக இருக்கும்: ஐஎம்எப்**

EVA STAL



கோப்புப்படம்

**புதுடெல்லி:** நடப்பு நிதியாண்டில் இந்தியாவின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜிடிபி) வளர்ச்சி 6.3% ஆக இருக்கும் சர்வதேச செலாவணி நிதியம் (ஐஎம்எப்) தெரிவித்துள்ளது.

இந்தியாவின் ஜிடிபி வளர்ச்சி நடப்பு 2023-24 நிதியாண்டில் 6.1 சதவீதமாகவும் அடுத்த நிதியாண்டில் 6.3% ஆகவும் இருக்கும் என ஐஎப்எப் ஏற்கெனவே கணித்திருந்தது. வளரும் நாடுகளிலேயே அதிக ஜிடிபி வளர்ச்சியைக் கொண்டதாக இந்தியா விளங்குகிறது என்றும் கடந்த ஏப்ரல் மாதம் ஐஎம்எப் தெரிவித்திருந்தது.

இந்நிலையில் ஐஎம்எப் அமைப்பின் வருடாந்திர கூட்டம் மொராக்கோ நாட்டின் மரக்கேஷ் நகரில் நேற்று நடைபெற்றது. இதில் ஐஎம்எப் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

கரோனா பெருந்தொற்று மற்றும் பிற சர்வதேச பிரச்சினைகள் காரணமாக உலக பொருளாதார வளர்ச்சியில் தொடர்ந்து பின்னடைவு காணப்படுகிறது. ஜிடிபி வளர்ச்சி மெதுவாகவும், சீரற்றதாகவும் உள்ளது.

நடப்பு நிதியாண்டில் உலக பொருளாதார வளர்ச்சி 3% ஆகவும் அடுத்த நிதியாண்டில் 2.9% ஆகவும் இருக்கும். அதேநேரம், இந்தியாவின் ஜிடிபி வளர்ச்சி நடப்பு நிதியாண்டில் 6.3% ஆக இருக்கும். கடந்த ஏப்ரல்-ஜூன் காலாண்டில் எதிர்பார்த்ததைவிட நுகர்வு அதிகரித்ததால், முந்தைய கணிப்பான 6.1%-ஐவிட ஜிடிபி வளர்ச்சி 0.2% அதிகரிக்கும். அடுத்த நிதியாண்டில் இது 6.3% ஆக இருக்கும்.

**சீனா பொருளாதாரம் குறையும்:** சீனாவைப் பொருத்தவரை நடப்பு நிதியாண்டில் ஜிடிபி வளர்ச்சி 5% ஆக இருக்கும். இது முந்தைய கணிப்பைவிட 0.2% குறைவு. இதுபோல அடுத்த நிதியாண்டில் இது 4.2% ஆக இருக்கும். இது முந்தைய கணிப்பைவிட 0.3% குறைவு. இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

இந்தியாவின் ஜிடிபி வளர்ச்சி நடப்பு நிதியாண்டில் 6.5% ஆக இருக்கும் என ரிசர்வ் வங்கி கணித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

EVA STALIN